ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

शिवे त्वां संसेव्य प्रथितकरुणां जन्म सफलं
करोमीति प्राज्ञे यदि तव भजेयं गृहवरम् ।
बलादाकृष्यैनं हृदयनयनादीन्द्रियगणः
वृथा धावत्यन्येष्वहह करवै किन्तु जननि ॥

ஶிவே த்வாம் ஸம்ஸேவ்ய ப்ரதிதகருணாம் ஜந்ம ஸஃபலம்
கரோமீதி ப்ராஜ்ஞே யதி தவ பஜேயம் க்ருஹவரம் ।
பலாதாக்ருஷ்யைநம் ஹ்ருதயநயநாதீந்த்ரியகண:
வ்ருதா தாவத்யந்யேஷ்வஹஹ கரவை கிந்து ஜநநி ॥

சிறந்த ஞானஸ்வரூபமாய் விளங்கும் ஹே ஸிவே! ஸகலப் பிராணிகளுக்கும் மங்களத்தைக்கொடுக்கும் ஹே பரமேசுவரி கருணாநிதி என்று எங்கும் பிரஸித்திபெற்றவளான உன்னை விதிப்படி நன்கு ஆராதித்து என்னுடைய இந்த மானிடஜென்மாவைப் பயன் பெற்றதாகச் செய்வோமென்று கருதி உன்னுடைய ஆலயத்தை அடைந்தேனேயானால் கண் காது மனம் முதலிய என்னுடைய இந்திரிய ஸமூகமானது நிர்ப்பந்தமாக இழுத்துக்கொண்டு கவனிக்கக் கூடாத அனாவச்யமான வேறுவிஷயங்களில் ஓடுகின்றது. ஹே ஜநநி! தாயாரான ஹே அம்பிகே இவவித கஷ்டத்திற்கு நான் என்ன செய்வேன் ?

முன் ஜன்மாக்களில் அனுஷ்டிக்கப்பட்ட புண்யகர்மங்களாலடையப்பட்ட இந்த ஜன்மாவில் உன்னை ஆராதித்துப் பிறவியால் ஏற்படும் கொடிய துக்கத்தைப் போக்கவேண்டுமென்று உன் ஸந்நிதியையடைந்தால் உன்னை ஸேவிக்கவிடாமல் என் இந்திரியங்கள் சத்ருவைப்போல் என்னை பலாத்காரமாக இழுத்துக் கெட்டவிஷயங்களில் தள்ளுகின்றன. அவைகளை ஜயிக்க எனக்குச் சக்தியில்லாமல் நான் படும் கஷ்டம் சொல்ல முடியாது. ஆகையால் இவ்விதக் கஷ்டத்திலிருந்தும் என்னை ரக்ஷித்து என் கோரிக்கையைப் பூர்த்திசெய்யவேண்டியது தாயாரான உன் கடமை என்று ஒரு பக்தர் ஸ்ரீ பரதேவதையிடம் பிரார்த்திக்கிறார். சுபம்.

உபபத்திராதிபர்.

# ஸம்ஸ்காரம்.

## 7-வது சௌளம்.

(93-வது பக்கத்தொடர்ச்சி)

சௌளமென்பது குடுமி வைப்பதாம். இது துவிஜர்களுக்கு முக்யமான ஸம்ஸ்காரம்; சிகை (குடுமி), யக்ஞோபவீதம், வஸ்திர தாரணம் முதலியன அவர்களுக்கு வெளிப்படையான அடையாளமாம். அதெப்படியெனில் நிரூபிப்பாம். துவிஜாதிகளின் சரீரம் சுருதி ஸ்மிருதிகளில் அனேகப்பிரகாரமாக ரூபணம் செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது ஓரிடத்தில் இரதமென்றும், வேறிடத்தில் ஓடமென்றும், மற்றவிடத்தில் பட்டணமென்றும், மேலுக்குமேல் எழுமாளிகை வைத்துக்கட்டின அரண்மனையென்றுமிவ்வாறு பலவிதமாய்க் கூறப்படுகின்றது. ஒவ்வொரு ரூபணமும் ஒவ்வொரு பிரயோஜனத்தைக்கருதி ஏற்பட்டது. அதை வேறு பிரகரணத்தில் கூறுவோம், அதில் அரண்மனையாகக் கூறப்படும் ரூபணத்தில் ஒரு அரண்மனையில் மேல்மாளிகை ஏதேனுமோர்வித ஆவரணத்தால் மூடப்படாமல் மொட்டைச்சுவராய் நிற்குமானல் வெளியில் நின்று பார்ப்பவர்களுக்கு "இதனுள்ளே ஒருவருமில்லையோ? சூன்னியமாயிருக்கின்றதோ?" என்று ஸந்தேஹத்திற்கிடமாகக் காணப்படுவதுபோல இச்சரீரமென்னும் பங்களாவிலும் மேல்பாகமாகிய சிரஸ்ஸில் சிகையெனப்படும் ஆவரணத்தால் மூடுதல் ஏற்படாவிடில் அது உள்ளே யாருமில்லாததாகவும் சூன்யமாகவும் காணப்படும். இது ஆபஸ்தம்பதர்மம் 10-வது காண்டம் 8-வது ஸூத்திரத்தில்

"अथापि ब्राह्मणम्। रिक्तो वा एषोऽनपिहितोऽयं मुण्डः। तस्यैतदपिधानं, यच्छिखेति"

“𑌅𑌥𑌾𑌪𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌮𑍍 । 𑌰𑌿𑌕𑍍𑌤𑍋𑌵𑌾 𑌏𑌷𑍋𑌽𑌨𑌪𑌿𑌹𑌿𑌤𑍋 𑌯𑌨𑍍𑌮𑍁𑌣𑍍𑌡𑌃 । 𑌤𑌸𑍍𑌯𑍈𑌤𑌦𑌪𑌿𑌧𑌾𑌨𑌂, 𑌯𑌚𑍍𑌛𑌿𑌖𑍇𑌤𑌿”

‘இதுவிஷயத்தில் ப்ராம்மணவாக்யமும் பிரமாணமாயிருக்கின்றது. மேலே மூடுதலில்லாமல் உள்ளே சூன்யமாயுள்ள கடம், வீடு மாளிகை முதலியது எத்தன்மைத்தோ? அத்தன்மையையுடையவனும் தலையில் சிகையில்லாமல் மொட்டையாயுள்ளவன். அதற்காக மேல் மூடுதலாக அவனுக்கு சிகை விதிக்கப்பட்டதாம்

என்று கூறப்படுகின்றது. அன்றியும் ஒவ்வொரு அதிகாரத்தில் அமர்ந்த தேவர்கள், பிதிருக்கள், ரிஷிகள் சிலகாலத்தில் பலவிதமான காரியங்களையுத்தேசித்து தேவலோகமிருந்து இதரலோகங்களுக்குப் போவதுபோல் மனுஷ்யலோகமாகிய இந்த பூலோகத்திற்கும் வருவார்கள். வந்தால் அவர்களுக்குத் தங்குமிடம் பிராம்மணனுடைய சரீரமாம். இது தைத்திரீயாரண்யகம் 2-வது ப்ரச்னம் 15-வது அனுவாகத்தில் ஒரு வாக்கியத்தில் ஸ்பஷ்டமாய்க் கூறப்படுகின்றது அப்படி தேவாதிகள் வந்து தங்குமிடமான பங்களாப்போன்ற பிராம்மண சரீரத்திற்கு மேல் ஆவரணம்போன்ற சிரஸ்ஸில் சிகை அவசியமாயுள்ளது. அது இல்லாமல் மொட்டையடித்து விடுவதோ, கேசங்களைக் கத்தரித்து விடுவதோ, மற்றுமுள்ள தற்கால நாகரீகங்களெல்லாம் அலங்கோலமாகும். அம்மாதிரியுள்ள சரீரத்தைக் கண்டதும் தேவதைகள் விலகி விடுகிறார்கள். அவர்களையும் தள்ளிவிடுகிறார்கள். இவ்வாறு தேவதைகளால் தள்ளிவிடப்பட்டவர்களுக்கு கோடை, மாரி, பனி என்ற கால வியவஸ்தை மாறிவிடுகின்றது அதனால் அனேக அனர்த்தங்கள் விளைகின்றன. இது சரகஸம்ஹிதையில்,

देवताभिरिह त्यज्यन्ते । .... अपक्रान्तदेवतानामृतवो व्यापद्यन्ते ।

“𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌿𑌰𑌿𑌹 𑌤𑍍𑌯𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 । ...........

𑌅𑌪𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌮𑍃𑌤𑌵𑍋 𑌵𑍍𑌯𑌾𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇”

என்பதாதி வாக்கியங்களால்கூறப்படுகின்றது இதனால் தேவதாப்பிரார்த்தனை முதலியவைகளை முன்னிட்டும் சிகையை எடுத்து மொட்டைபோடுவது தோஷமுள்ளதென சுருதியின் கூற்று. ஆனால் ஸத்திரங்களெனப்படும் சில யாக விசேஷங்களில் சிகையைக் கூட வபனம் செய்யும்படி விதிக்கப்படுகின்றதேயெனில்:—

அங்கு விதிவாக்யத்தால் விதிக்கப்பட்டகாலாம்; என்று ஆபஸ்தம்பதர்மம் 10-வது கண்டம் 9-வது ஸூத்திரத்தில்,

सत्रेषु तु वचनाद्वपनं शिखायाः ।

"ஸத்ரேஷு து வசநாத் வபநம் ஶிகாயா: ॥"

என்று கூறப்படுகின்றது அந்த விதிவாக்கிய ஸாமர்த்தியத்தாற்றான் ஸாமகர்களுக்கு உபநயனம் வரை சிகையுள்பட வபனம் செய்யப்பட்டு வருகின்றது அந்த விதி பலத்தாற்றான் ஸன்னியாஸிகளுக்கு சிகா யக்ஞோபவீதங்கள் எடுத்துவிடப் படுகின்றன. விதிவாக்கியம் விதிக்காதவிடத்தில் சிகையெடுப்பது தவறேயாகும் ஆகையால் வெளியடையாளமாம் சிகை அதனால் அது அவசியமாம்.

பத்திராதிபர்.

## கல்லிடைக்குறிச்சி கிராமத்தில் பிராம்மண மஹாஸபை ஸ்தாபனம், (28-2-28)

இன்று இவ்வூரில் ஸ்ரீ வாராஹபுரம் தெருவில் கீர்வாண வாக் பரிபாலினீ ஸபைக்கெதிரில் மாலை 5-மணிக்கு ஓர் மஹாஜனக் கூட்டம் நடைபெற்றது. அங்கு பலரும் விஜயஞ் செய்திருந்தனர். அச்சமயம் கோமதி ஸ்ரீசங்கரதீக்ஷிதர் அவர்கள், இவ்வூர் ஸம்ஸ்கிருதகாலேஜ் தலைமைஉபாத்தியாயரும், பண்டிதோத்தமருமாகிய ப்ரம்மஸ்ரீ சங்கரசாஸ்திரியள் அவர்களை அக்கிராஸனாதிபதிபதவியை ஏற்றுக்கொள்ளும்படி பிரேரேபிக்க சங்கரசாஸ்திரிகள் அதிபதவியைஏற்றுக்கொண்டார்கள் அக்கிராஸனாதிபதிஅவர்கள் முகவுரையாகப் பேசுகையில், தற்காலம் பிராம்மணதர்ம்மங்களும் நமது ஸதாசாரங்களும் மறைந்துகொண்டேவருவதால் அதைக்காப்பாற்றஓர்மஹாஸபையை ஏற்படுத்தவேண்டுமென்பதே ஸபையின் நோக்கம் என்று எடுத்துச் சொன்னார்கள்.

அதன்மேல் ஸ்ரீமான் T. K. ராமபத்ரசர்மா அவர்கள் தற்காலம் பிராம்மணதர்ம்மங்களும் ஆசாரங்களும் நிலைகுலைந்திருப்பதால் இவ்வூரில் ஓர் ப்ராம்மணமஹாஸபை ஸ்தாபிக்கப்படவேண்டுமென்ற தீர்மானத்தைப் பிரேரேபித்து, மேலும் பேசியதாவது— இச்சபையில் ப்ராம்மணர்களுள் ஒவ்வொருவரும் மெம்பராயிருக்கவேண்டுமென்றும் ஒரு சிறுதொகையைச் சந்தாவாகச் செலுத்தி

ஸபையை முன்னுக்குக்கொண்டுவரவேண்டுமென்றும் ப்ரஸங்கித்தார். பிறகு அத்தீர்மானம் யாவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

அக்கிராஸனாதிபதி முடிவுரையாகப் பேசுகையில் நமது ஆசாரங்களைக் கெடுக்கவரும் மேதாவிகள் ச்ருதிகளும், ஸ்மிருதிகளும் தங்களுக்கு அனுகூலமாயிருக்கின்றனவென்று சில ச்ருதிகளையும் ஸ்மிருதிகளையும் எடுத்துச்சொல்லுகிறார்களென்றும், ஆனால் அந்த ச்ருத்யாதிகளுக்கு அவர்களுரைப்பது ஸரியான அர்த்தமில்லை என்று பல திருஷ்டாந்தங்களுடன் பாலர்க்கும் புரியும்படியான விதத்தில் உபன்யஸித்தார்கள்.

வந்தனோபசாரத்துடன் ஸபை கலைந்தது.

கார்யதரிசி,

*S. V. S.* ஸபை, கல்லிடைக்குறிச்சி.

---

## மாணவர் சங்கம்.

### நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.

நமது நாட்டில் மதப்பற்று தெய்வபக்தி, குருபக்தி, இவைகள் குன்றியிருப்பது நம் நாட்டின் க்ஷீண தசைக்குக் காரணமாதலால் நமது இந்து மதத்தைச்சார்ந்த சிஷ்யகோடிகளின் க்ஷேமத்தையே கருதி பகவானே அவர் வாக்குப்படி இக்கலியுகத்தில் திருஅவதாரம் செய்திருக்கிறார் என்றே நினைக்கும்படி கும்பகோணம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதியாக விளங்கிவரும் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்களின் ஆக்ஞையை முன்னிட்டு ஊர் ஊராகச்சென்று நம் மதத்தின் கொள்கைகளைப்பற்றியும், மதத்தின் பெருமைகளைப் பற்றியும் உபன்யஸித்துவரும் ஸ்ரீமான் ஜெகதீசசாஸ்திரிகள் அவர்கள் ஷை சங்கத்தின் ஆதாவின்கீழ் (16-3-28)மாலை $4\frac{1}{2}$-மணிக்கு 'இந்துமதத்தின் கொள்கைகள்' என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் அழகான உபன்யாஸம் செய்தார்கள். அப்பொழுது பள்ளிக்கூடத்து ரிலிஜன்பண்டிதர் ஸ்ரீமான் டி. கே. வெங்கடராகவாசாரியார் அவர்கள் தலைமைவகித்தார்கள். மற்றும் பல உபாத்தியாயர்களும் வித்வான்களும் பொது ஜனங்களும் ஸ்கூல் மாணவர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

முதலில் வழக்கம்போல் கடவுள்வணக்கமும் சிறியமுகவுரையும்அக்கிராஸனாதிபதியாலேயே சொல்லப்பட்டது. பிறகு ஸ்ரீமான்

உபன்யாஸகர் அவர்கள் முதலில் இந்த ஸ்தலத்தின் மகிமையைப் பற்றிக் கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லிவிட்டு இந்துமதத்தின் கொள்கைகள் என்னும் விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். அப்பொழுது ஸ்ரீமான் உபந்யாஸகர் அவர்கள் தேச முன்னேற்றம் அவசியமென்றும் தேசமுன்னேற்றத்திற்கு மதம் அவசியமென்றும் மதத்தை அனுஸரித்தால்தான் க்ஷேமம் உண்டென்றும் ஆகையால் ஒவ்வொருவரும் அவரவர் மதத்தை அனுஸரிக்கவேண்டுமென்றும் சொன்னார். பிறகு நம்மதத்தைப்பற்றிப் பேசும்பொழுது நம்மதத்திற்கு நன்றாகப்பொருந்தக்கூடிய பெயர் 'வைதிக மதம்' என்றும், நம்மதம் அனாதி என்றும் நித்யம் என்றும் நம் மதத்தின் கொள்கைகளில் சிலவற்றை எடுத்துரைத்து ஒவ்வொரு தர்மத்தையும் நியமத்துடன் அனுஷ்டிக்கவேண்டும் என்றும், சாஸ்திர ஆராய்ச்சிசெய்யத் தேவபாஷையாகிய ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்கவேண்டுவது அவசியமென்றும் இளைஞர்களும் அறியுமாறு எளியநடையில் எடுத்துரைத்து இவைகளுக்கு ஆதாரமாக ஸ்மிருதி புராணாதி மஹா காவ்யங்களிலிருந்து ச்லோகங்களை எடுத்துக்கூறி அவைகளின் உண்மையான தாத்பர்யங்களையும் அழகானநடையில் எடுத்துரைத்து எல்லாவற்றிற்கும் அருள் புரியவேண்டுமென்று ஸ்ரீமந்நாராயணனைப்பிரார்த்தித்துக்கொண்டு தன் அழகான உபன்யாஸத்தை முடித்துக்கொண்டார்கள்.

பிறகு ஸ்ரீமான் அக்கிராஸநாதிபதி அவர்கள் உபன்யாஸகரையே அனுஸரித்துக்கொஞ்சகாலம் பேசினார்கள். பிறகு பள்ளிக்கூடத்துத்தமிழ்பண்டிதர்(ஸம்ஸ்கிருதத்திலும் பண்டிதர்)ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் உபன்யாஸத்தின் அழகையும் இவ்வித உபன்யாஸங்களின் பிரயோஜனங்களையும் எல்லோரும் கேட்டு ஆனந்திக்குமாறு உரைத்து அவ்வித உபன்யாஸங்கள் இப்பள்ளிக்கூடத்தில் அடிக்கடி நடக்கவேண்டுமென்று தான் (எல்லோரும்) அபிப்பிராயப்படுவதாகவும் அவ்வித அபிப்பிராயம் பூர்த்தியாகவேண்டுமென ஸ்ரீராஜகோபாலனைப் பிரார்த்திப்பதாகவும் சொன்னார்.

பிறகு ஷியாராலேயே ஷி சங்கத்தின்அங்கத்தினர்களின் சார்பாக ஸ்ரீமான்கள் அக்கிராஸனாதிபதி அவர்களுக்கும் உபன்யாஸகர் அவர்களுக்கும் மனமார்ந்த வந்தனங்கள் அளிக்கப்பட்டு இரவு 7-மணிக்குக் கூட்டம் கலைந்தது. சி. வெ. ராஜகோபாலன்.

# விவாஹவயது மசோதா கண்டனம்.

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கரா சார்யஸ்வாமிகளால் ஷை மசோதாவை கண்டிக்க கௌரவப் பிர சாரகராய் நியமிக்கப்பட்ட பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா அவர்கள் கீழ்க்கண்டவிடங்களில் உபன்யாஸம் செய்தார்.

## சென்னைமாநகர்

20-2-28 மாலை 5-மணிக்கு சாவுகார்பேட் ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம் ஸ்ரீ புஷ்பகிரிமடத்தில் கும்பகோணம் பிரும்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அக்ராஸனத்தின் கீழ் பிரும்மஸ்ரீ சர்மாவும் ஸ்ரீ. தி. ராமநாததீக்ஷிதரும் ஷை மசோதாவைக் கண்டித்துப் பேசினார்கள். தீர்மானம் அனுப்பப்பட்டது. 11-3-28 காலை திருவட்டீச்வரன் பேட்டை சிவன் கோவிலில் ஸ்ரீ ராமச்சந்திர தீக்ஷிதர் தலைமையில் ஓர்ஸபை கூடிற்று. ஸ்ரீசர்மா உபன்யஸித்தார். அன்று மாலையே சென்னை ஜில்லா வைதிக ஹிந்து மஹாஸபை நடந்தேறியது.

## காஞ்சீபரம்.

3-3-28 மாலை 4-மணிக்கு சிவகாஞ்சியில் பிரும்மஸ்ரீ கல்பட் சீனிவாஸசாஸ்திரிகள் தலைமையின்கீழ் ஸ்ரீ சங்கரமடத்தில் ஓர் பெரிய ஸபை கூடிற்று. ஸ்ரீ சர்மா இரண்டு மணி எல்லோருக்குமுள்ள ஸந்தேஹம் தீர உபன்யஸித்தார். இதை எதிர்க்கவே வந்தோம் எனக் கூறிய சிலரும் பின்னால் இதற்கு அநுகூலமாகக் கையெழுத்திட்டனர்.

22-3-28 மாலை 4-மணிக்கு ஸ்ரீ வரதராஜசுவாமி கோவிலில் ஸ்ரீமான் கிருஷ்ணமாசாரியார் ரிடையர்ட் டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்டிரார் அக்ராஸனத்தின் கீழ் பலநூறு ஸ்ரீவைஷ்ணவர் கூட ஸ்ரீ சர்மா வெகு கம்பீரமாக ஒருமணி உபன்யஸித்தார். பிறகு A ராகவாசாரியார், பண்டித குமாரதாதாசாரியார், வரதாசாரியார் B A, பண்டித கிருஷ்ணதாதாசாரியார், ஸ்ரீ சர்மா முதலிய பலர் ஆமோதிக்கக் கண்டனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று. பல கையெழுத்துகளிடப்பட்டன. ஸ்ரீ வெங்கடார்யா வந்தனோபசாரம் சொல்ல ஸபை கலைந்தது.

பூந்தமல்லி.

12-3-28 இரவு 8-மணிக்கு பூந்தமல்லி எலிமெண்ட்ரி ஸ்கூலில் ஓர் ஸபை ஸ்ரீ வேதாந்தாசாரியார் பி.ஏ,,பி.எல். தலைமையில் கூடியது. பிரும்மஸ்ரீ சர்மா உபன்யஸித்தார். ஒரு பிராமண ஸகோதரர் சில கேள்வி கேட்டார். தக்க பதில் கூறப்பட்டபிறகு அவரும் இதற்கு அநுகூலமாகவே வாக்களித்தார். ஏகமனதாகக் கண்டனத்தீர்மானம் நிறைவேறி கவர்னருக்கும், வைச்ராயிக்கும் பல கையெழுத்துக்களுடன் அனுப்பப்பட்டது.

செங்கல்பட்

21-3-28 மாலை 6-மணிக்கு வேணுகோபால கிளப்பில் பிரும்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் அக்ராஸனத்தின்கீழ் வக்கீல்கள் கூட்டம் ஒன்று கூடியது. ஸ்ரீமதாசாரியாளது ஸ்ரீமுகம் ஸ்ரீசர்மாவால் படிக்கப்பட்டு ஷை மசோதாவைப்பற்றி சுருக்கிப் பேசி ஸம்சயங்களை இரவு உபன்யாஸத்தில் விளக்குவதாகக்கூறினார். மகா-ா-ஸ்ரீ செங்கலவராயர் BA அனந்தராமய்யர் B.A, B L, ஜி. கிருஷ்ணமாசார்யார் B A, B L; இவர்கள் கண்டனத் தீர்மானத்தை ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேறி அனுப்பப்பட்டன.

சிவன் கோவில்.

இரவு 8-மணிக்கு அதேவூர் சிவாலயத்தில் ஸ்ரீ பி பி. கிருஷ்ணமாசாரியார் பி. ஏ., பி. எல். அவர்கள் அக்கிராஸனத்தின்கீழ் ஐநூறு ஜனங்களுக்குமேல் எல்லா ஜாதியாரும் ஆண்பெண்களடங்கிய ஓர் மஹாஸபை கூடிற்று. வாதத்திற்கென பலர் வந்திருந்தனர். வழக்கப்படி பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ சர்மா இரண்டுமணி புங்காநுபுங்கமாக உபன்யாஸமாறிபொழிந்தார், எல்லோருள்ளமும் ஸந்தோஷித்ததால் எவரும் கேள்விகேட்க முன்வரவில்லை. ஓர் வக்கீல்மாத்திரம் அந்தச்சுத்தியுடன் சில ஸம்சயங்களைக் கேட்டார். தக்கபதில் ஸ்ரீசர்மா கூறவே வக்கீல்களான ஜி. கிருஷ்ணமாசாரியார், கே. துரைஸாமி அய்யங்கார்முதலியவர்களால் ஆமோதிக்கப்பட்டு கண்டனத்திர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று.

ஸ்ரீபெரம்பூதூர்.

17—3—28 காலை 9-மணிக்கு ஸ்ரீ ராமாநுஜாவதரித்த ஸ்ரீ பெரும்பூதூரில் ஸம்ஸ்கிருத காலேஜில் பிரின்ஸிபால் ஸ்ரீ-உ-வே. ராமாநுஜாசாரியஸ்வாமிகள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம்

கூடியது. தலைவர் முன்னுரைக்குப் பிறகு ஸ்ரீசர்மா மசோதாவைக்கண்டித்து ஓர் உபன்யாஸம் செய்தார். சிரோமணி ராமசந்திரசாஸ்திரி ஆமோதிக்க ஸபையார் கண்டனத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி அனுப்பினர். பலர் ஸ்ரீமதாசாரியாளது ஊக்கத்தைக்கொண்டாடினர். பண்டி-தலைப்ரேரியள் ஸ்ரீராமாநுஜர் இச்சபையைக்கூட்டி மிக உத்ஸாஹமாக நடத்திவைத்தார்.

## மதுராந்தகம்.

22—3—28 காலை 8-மணிக்கு ஸம்ஸ்கிருத பாடசாலையில் ஸ்ரீ-உ-வே திருவேங்கடாசாரியார்ஸ்வாமி தலைமையில் ஸ்ரீ சர்மா ஓர் உபன்யாஸம் செய்ய, ஸ்ரீமான்கள் நரசிம்மாசாரி, ஸ்ரீநிவாஸாசாரி, திருமலாசாரியார் முதலிய பண்டிதர்கள் ஆமோதிக்கக் கண்டனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று.

தீ. ராமநாத தீக்ஷிதர்.

## புதுக்கோட்டை.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய சுவாமிகள் அவர்களுடைய அனுக்ரஹமூலமாக இவ்வூரில் விவாஹ வயது மசோதா கண்டனங்களைப்பற்றிப் பப்ளிக் மீட்டிங்குகள்கூடி தீர்மானங்கள் செய்து அவைகளைக் கவர்னர் அவர்களுக்கும், வைச்ராய் அவர்களுக்கும் எழுத்துமூலமாகத் தெரிவித்திருக்கிறோம். இரண்டு மஹஜர்கள் மட்டில் தயாரிக்கப் பட்டு ஒவ்வொன்றிலும் 500 கையெழுத்துக்குமேல் ஆஸ்திக பிராம்மணர்களிடம் கையெழுத்துவாங்கி 15—3—28ல் கிரமப் படி தபாலில் ரிஜிஸ்தர்மூலம் அனுப்பப்பட்டிருக்கிறது.

மஹஜரின் விஷயம் தற்காலம் சென்னை சட்ட சபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் "விவாஹ வயது மசோதாவையும் டில்லி சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கும்ஸம்போகவயது நிர்ணய மசோதாவையும் அடியோடுதள்ளிவிடும்படிக்கும்" இனியும் மாக்ஷிமைதங்கிய விக்டோரியாமஹாராணியார் அவர்கள் செய்திருக்கும் பிரதிக்ஞைக்கு விரோதமாக மதம் அல்லது மதஸம்பந்தமான சடங்குகளையும் வழக்கங்களையும் பாதிக்கக்கூடிய எவ்வித மசோதாக்களையும் சட்ட ஸபைகளில் அங்கீகரிக்காமலிருக்கும் படிக்கும் முறையே கனம் மதராஸ் கவர்னர் அவர்களையும் கனம் வைச்ராய் அண்டு கவர்னர் ஜனரல் அவர்களையும் மிக வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மலையப்பசாஸ்திரியள்,

# ஆபஸ்தம்ப கிருஹ்யஸூத்ர விசாரம்.

இந்த பூமிக்கு மேதினி என்று பெயர். ஸ்ரீநாராயணனால் மதுகைடபாஸுரர்கள் வதம்செய்யப்பட்டபொழுது அவர்களுடைய கொழுப்பினால் இந்தபூமி கெடுக்கப்பட்டது. (मेदस् மாமஸத்திலுள்ள ஒருவிதக் கொழுப்பு) அதனால் மேதினி என்று காரணப்பெயர் ஏற்பட்டது. அந்த பூமியில் ஹோமம்செய்ய அக்னியைப் பிரதிஷ்டைசெய்யவேண்டுமானால் முதலில் பிரதேசத்தை சுத்தம்செய்துகொள்ளவேண்டும். இதற்கு उल्लेखनं என்றுபெயர். யக்ஞங்களில் முதன்முதலில் பொன்கலப்பையைக்கட்டி உழுவார்கள். அவ்விதம் ஜனகமஹாராஜன் செய்தபொழுதுதான் ஸ்ரீஸிதாபிராட்டி கிடைத்தனள். வீடுகளில் செய்யவேண்டிய ஹோமங்களுக்குப் பொரசு ஸமித்தினாலோ கட்டை தர்ப்பத்தினாலோ மும்மூன்று கோடுகள் கிழக்கிலும் வடக்கிலும் முடியும்படி கீரவேண்டியது. இது முதல்கார்யமாயினும் கிருஹ்யஸூத்திரத்தில்சொல்லவில்லை. சொல்லாவிடினும் அதற்குப்பிறகு ஆபஸ்தம்பரால் கூறியுள்ள தர்மஸூத்திரத்தில் சொல்லியிருக்கிறார். அதைத்தான் ஆபஸ்தம்பஸூத்திரிகள் எல்லாவித அக்னிகார்யங்களிலும் கையாளவேண்டும் ரிஷிகள் ஓரிடத்தில் சொல்லியிருந்தாலும் சொல்லப்போவதாக இருந்தாலும் அது இரட்டிப்பாகாமல் சொல்லுவதே அன்னவர் மகிமையை விளக்குகிறது. கிருஹ்யஸூத்திரத்தில் சொல்லவேண்டியவைபோக மிச்சத்தை தர்மஸூத்திரத்தில் கண்டுகொள்ளலாம். முதற்கூறியது ச்ரௌதஸூத்திரம். நேரான வேதப்பிரமாணமுள்ளது. இரண்டாவது கிருஹ்யஸூத்திரம். அனுமான வேதப்பிரமாணமுள்ளது. மூன்றாவது தர்மஸூத்திரம். கீழ்கூறிய இரண்டு ஸூத்திரங்களும் அபேக்ஷிக்கும்தர்மத்தை போதிக்கிறது.

ஆபஸ்தம்ப மஹரிஷியால் "பிர்ம்மா" வென்று ஸ்மார்த்தஸூத்திரத்தில் சொல்லப்படவில்லை. ஆகையால் அந்தஸ்தானத்தில் பிராம்மணர் என்றே ஹோமகாலத்தில் பூஜித்து விடைகொடுத்து அனுப்பவேண்டும். இதுதான் ஸூத்திரத்தின் கருத்து. இதையறியாமல் மாறுகச் செய்துவருபவர்களுக்குப் பிரமாணம் அவர்களையே கேட்கவேண்டியதுதான்.

ஹோமங்களிலும் நெய்யையே முக்கியமாயுள்ளதில், ஒரே இலையை வைத்துக்கொண்டும், தான்யஹவிஸ் உள்ளதாயிருந்தால் இரண்டு இலைகளை வைத்துக்கொண்டும், ஹோமம் செய்யவேண்டியது என்பது ஸூத்திரக்காருக்குச் சம்மதம்.

பிறகு அரக்கர்கள் ஹோமத்துக்கு இடையூறு செய்யாமலிக்க மூன்றுபக்கங்களிலும் புரசை சமித்துகளைப்போட்டும், கிழக்கில் சூர்யன் உதித்துவருவதால் கிழ்புறத்தில் சமித்தைப் போடாமலும் மேலேயிருந்து இறங்கி அபகரிக்காமலிருக்க இரண்டு சமித்துக்களை அக்நியில் ஊன்றிவைத்தும், அக்நி புஷ்டியாவதற்காக 15-சமித்துக்களை ஒரே தடவையில் போட்டு ஜ்வலிக்கச் செய்து நடுவில் முக்கிய ஹோமங்களைச்செய்து, பக்கபலமாக சில ஒத்தாசை ஹோமங்களைச் செய்தும் வடக்கிலுள்ள வருணனையும் தெற்கிலுள்ள பிராமணரையும் விடையாகப் பிரார்த்தித்து அக்னி தேவனையும், தன் இஷ்டம்போலிருக்க உபஸ்தானம் செய்து, கர்மாவைப் பூர்த்திசெய்யவேண்டும். இது எல்லா ஹோமங்களுக்கும் பொதுவானது. இனிமேல் கண்டங்களை விசாரிப்போம்.

மூன்ருவது கண்டத்தில் பெண்ணைப் பார்ப்பதற்குப் போக வேண்டிய நக்ஷத்திரங்களும், பெண்ணை தானம் செய்யவேண்டிய விசேஷகாலமும் பெண்களில் விலக்கவேண்டிய லக்ஷணங்களும் பரீக்ஷிக்கவேண்டிய வழிகளும், வரனுடைய இலக்கணமும் சொல்லிமுடித்து, நாலாவது கண்டம் முதலாக விவாஹவிதியைக் கூறுகிறர். மந்திர ப்ரச்னத்தில் மந்திரங்கள் எம்முறையாகக் கூறியுளதோ, அதைப் பின்பற்றியே ஸூத்திரம் வரைந்துளது.

வேதமறிந்தவர்களையும் தன் இஷ்டத்துக்கு ஒத்து இருப்பவர்களையும் பார்த்துப் புருஷன் பிராமணர்களே தாங்கள் எனக்கு அநுகூலையான பெண்ணைப் பார்த்து வரியுங்கள், ஞானமார்க்கமாய் மோக்ஷம் பெருபவர்களுக்கு தேவர்கள் இடஞ்சல் செய்வார்கள். 'நான் மனையாளோடு ஸோமயாகம் செய்து இந்திராதி தேவர்களைத் திருப்தி செய்து வைப்பேன்' என்று இந்திரன் உங்களுக்குத் துணையிருப்பான். முதல் மந்திரத்திலேயே விவாகத்திற்கு முக்கியப் பிரயோஜனம், யாகாதிகள் செய்வதென்றும், நித்ய, நைமித்திக கர்மானுஷ்டானம் செய்வுதே நோக்கமென்றும்

இச்சையைப் பூர்த்தி செய்துகொள்வதும்கூட வம்சவிருத்திக்கும் பிதிர்க்களின் கடன் தீர்ப்பதற்கும் என்றும் வியக்தமாய் விவாகத்தில் முதன் முதலாகச்செய்கிற ஸங்கல்பத்தில் ஏற்படுகிறது. ஸம்ஸ்கிருதபாஷா ஞானம் இல்லாதவர்களும், உண்மை ஹிந்து இல்லாதவரும் இதை எப்படி அறியமுடியும்? இந்தமாதிரி அறியாமையால் புதிதுபுதிதான கிளர்ச்சிகள் உண்டாகிவருகின்றன.

(இன்னும்வரும்.)

கிருஹ்யக்ஞ

**வி. உமாமகேச்வரசாஸ்திரி.**

# ஆஸ்திகர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

அந்தணர்களுக்கு முககியமான கர்மாக்கள் பல உள. அவைகளில் முதன்மையானது பித்ருசிராத்தமும், பதுர்தர்ப்பணமுமேயாகும். நாம் செய்யும் சிராத்தமானது நம் பித்ருக்கள் எவ்வித ஜன்மாவை அடைந்தபோதிலும் அயல்நாட்டு மணியாடர் (Foreign Money order) போல் அவர்களை அடைகின்றது. நாம் ஒவ்வொரு வருஷமும் அவர்களை இறந்த திதியன்று திருப்தி செய்விக்கவேண்டும். அவ்வாறு திருப்திசெய்விக்க திதி காட்டும் கருவி பஞ்சாங்கமே.

தற்பொழுது ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாங்கத்தைப் பற்றி அதிக பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் வாக்கிய கணிதத்தில் முதன்மைபெற்ற 28-நம்பர் பஞ்சாங்கத்தில் 28வகையுய் திருக்கணிதத்தில் மூன்றுவிதமும் அச்சிடப்பட்டு விற்பனைக்குத் தயாராகிவிட்டது. இனி ஆஸ்திகர்கள் சும்மா மௌனம் சாதிக்காமல் ஒவ்வொரு இடங்களிலும் பொதுக்கூட்டம் கூடி எந்தப் பஞ்சாங்கத்தை அனுஷ்டிப்பதென்பதை ஆர்யதர்ம மூலமாகவோ, தினசரி பத்திரிகை மூலமாகவோ, தெரிவிக்குமாறு ஆஸ்திகர்களை பன்முறை வந்தனத்துடன் பிரார்த்திக்கிறேன்.

**எஸ். வி. நாகேச்வரன்.**